1981 மே 12]

6. அறிக்கை அளித்தல்.

(அ) விவசாய மின் இணைப்புகளுக்குக் கூடுதல் மின்சக்தி வழங்கல்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மின்வெட்டு அமுலில் இருக்கும்பொழுது கிராமப்புறங்களுக்கும், விவசாயமின்இணைப்புகளுக்கும் சீரான மின் விநியோகத்தை உறுதி செய்யும் நோக்கத்துடன், உயர் அழுத்த மற்றும் இதர மின் இணைப்புகளுக்குக் கூடுதல் கட்டுப்பாடுகளை அரசு அமுல்படுத்தி அதைப்பற்றி சட்டமன்றப் பேரவையில் 7-3-1981ல் அறிவிக்கப்பட்டது. அதன்படி, 9-3-1981. முதல் விவசாய மின்இணைப்புகள் மூன்று பிரிவாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பிரிவிற்கும் நாள் ஒன்றுக்கு பகலில் ஆறுமணி நேரம் அல்லது இரவில் 9 மணி நேரம் தடையின்றி மின்சாரம் வழங்க வகை செய்யப்பட்டது. இதனால் கிராமப்புறப் பகுதிகளில் முன் அறிவிப்பு இல்லாத மின்சுமை குறைப்பு (Unscheduled loadshedding) தவிர்க்கப்பட முடிந்தது. ஆயினும் 2-4-1981 முதல் 11-1-1981 முடிய உள்ள நாட்களில் 110 கே. வி. பீடர்களில் மின்சுமைக் குறைப்பு அமுலாக்க வேண்டியது தவிர்க்க முடியாததாகிவிட்டது. இதற்குக் காரணம் அதிக நுகர்வு, மற்றும் எண்ணூர் தூத்துக்குடி, நெய்வேலி ஆகியவற்றிலிருந்து குறைந்த மின்வரத்து இவையாகும். நிலைமை திருந்தியபின், அதாவது 12-4-1981 முதல் மின்சுமை குறைப்பு இல்லை. சீரான விநியோகம் தொடர்ந்து வருகிறது. மேலும் இரவு நேரத்தில் மின்சக்தி பெறுகின்ற விவசாய மின் இணைப்புகளுக்கு ஆங்காங்கே உள்ள நிலைமைகளைக் கருத்தில் கொண்டு பகலில் இரண்டு மணி நேரமாவது மின்சக்தி வழங்கப் படவேண்டுமென்று மேற்பார்வைப் பொறியாளர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். விநியோக நிலைமையை அரசு உன்னிப்பாகக் கவனித்து வருகிறது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(ஆ) மதிப்பீட்டுக் குழு.

டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு பேரவை மாற்றுத்தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்ற 7-வது பேரவையில்உருவாக்கப் பட்ட மதிப்பீட்டுக் குழுவின் சார்பாக—

"(1) மீனளத் துறை குறித்த மதிப்பீட்டுக் குழுவின்நான்காவது அறிக்கையையும்;

(2) எழுது பொருள்—அச்சுத்துறை பற்றிய மதிப்பீட்டுக் குழு அளித்த பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்த மேற்படி குழுவின் ஐந்தாவது அறிக்கையினையும்," பேரவை முன் வைக்கிறேன்,